## 2. அரசினர் தனித் தீர்மானம்

### இலங்கையில் போர்க் குற்றங்கள் மற்றும் இனப் படுகொலை நிகழ்த்தியவர்கள்மீது சர்வதேச விசாரணை நடத்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுமுன் வலுவான தீர்மானத்தினைக் கொண்டுவரவும், இலங்கைக்கு ஆதரவான நிலையை அமெரிக்கா எடுத்தால் அதனை மாற்ற ராஜதந்திர நடவடிக்கை எடுக்கவும் இந்தியப் பேரரசைக் கேட்டுக்கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஒரு முக்கியமான தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்த அவையிலே கொண்டுவர அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்களின் நீண்ட நெடிய உரிமைப் போராட்டத்தை உருக்குலைக்கும்வண்ணம், இலங்கைத் தமிழினத்தையே ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற நோக்கில் பல்லாண்டுகளாகத் திட்டம் தீட்டி அதனை வெற்றிகரமாக 2009 ஆம் ஆண்டு நிறைவேற்றியது இலங்கை அரசு.*

*2009 ஆம் ஆண்டு இலங்கை உள்நாட்டுப் போர் உச்சக்கட்டத்தில் இருந்த நிலையில், சர்வதேச சட்டம் மற்றும் ஜெனிவா ஒப்பந்தத்தில் உள்ள போர் விதிமுறைகளை முற்றிலும் மீறி, இலட்சக்கணக்கான அப்பாவி இலங்கைத் தமிழர்களைக் கொன்று குவித்து ஓர் இனப் படுகொலையை இலங்கை அரசாங்கம் நடத்தியது. இலங்கையில் உள்நாட்டுப் போர் நடைபெற்றபோது, மனித உரிமை மீறல் உட்பட பல்வேறு மனிதாபிமானமற்ற செயல்கள் அடங்கிய குற்றங்களை இலங்கை அரசு நிகழ்த்தியதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழு கண்டறிந்தது. இதன் அடிப்படையில், இலங்கையில் போர்க் குற்றங்கள் நிகழ்த்தியவர்களை போர்க் குற்றவாளிகள் என பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்தவும், இலங்கை முகாம்களில் இருந்த தமிழர்கள் அனைவரும் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பி சிங்களர்களுக்கு இணையாக, கண்ணியமாக வாழ*

2015 செப்டம்பர் 16] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வகைசெய்வதோடு, அனைத்துக் குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில் மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின்மீது பொருளாதாரத் தடை விதிக்கவும், மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி இந்த மாமன்றத்திலே 8-6-2011 அன்று என்னால் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டு, ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இலங்கை நாட்டை நட்பு நாடு என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும், இலங்கை இனப் போரின்போது நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து சுதந்திரமான, நியாயமான சர்வதேச புலன் விசாரணை நடத்திடவும், இந்த சர்வதேச விசாரணையின் அடிப்படையில், போர்க் குற்றம் நிகழ்த்தியவர்கள் சர்வதேச நீதிமன்றம் முன்பு நிறுத்தப்பட்டு, அவர்களுக்குரிய தண்டனையைப் பெற்றுத் தந்திடவும், தமிழர்கள் மீதான அடக்குமுறையை இலங்கை அரசு நிறுத்தும் வரை இலங்கை நாட்டின்மீது பொருளாதாரத் தடையை விதித்திடவும், ஈழத் தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்தில்கொண்டு தனி ஈழம் குறித்து இலங்கைவாழ் தமிழர்களிடமும், இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்திடவும், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தினைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மத்திய அரசை வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் என்னால் 27-3-2013 அன்று தீர்மானம் கொண்டு வரப்பட்டு, ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதுமட்டுமல்லாமல், இலங்கை நாட்டில் 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற வெளியுறவுத் துறை அமைச்சர்களுக்கான கூட்டம் மற்றும் காமன்வெல்த் கூட்டமைப்பின் உச்சி மாநாடு ஆகியவற்றை இந்தியா முற்றிலும் புறக்கணிக்க வேண்டும், பெயரளவிற்குக்கூட இந்தியா சார்பில் பிரதிநிதிகள் யாரும் கலந்துகொள்ளக்கூடாது, இதுகுறித்த இந்தியாவின் முடிவை உடனடியாக இலங்கை நாட்டிற்குத் தெரியப்படுத்த வேண்டும், இலங்கைத் தமிழர்கள் சுதந்திரமாகவும், சிங்களர்களுக்கு இணையாகவும் வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்வரை காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து இலங்கை நாட்டை தற்காலிகமாக நீக்கி வைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று இந்தியப் பேரரசை

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2015 செப்டம்பர் 16

வலியுறுத்தும் தீர்மானம் இந்த மாமன்றத்திலே என்னால் 24-10-2013 அன்று கொண்டு வரப்பட்டு, ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்திற்கு எதிராக அப்போதைய மத்திய அரசு செயல்பட்டபோது, மத்திய அரசின் நடவடிக்கைக்கு வருத்தம் தெரிவித்து 12-11-2013 அன்று இதே பேரவையிலே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து நான் நிறைவேற்றினேன்.

இதுமட்டுமல்லாமல், இலங்கை நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள், நடுவர்கள் மற்றும் அதிகாரிகளை உள்ளடக்கிய ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் தமிழ்நாட்டில் நடத்தப்படக்கூடாது என்றும், தமிழ்நாட்டில் நடக்கவிருக்கும் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை நாட்டைச் சேர்ந்த வீரர்கள், நடுவர்கள் மற்றும் அதிகாரிகளை அனுமதிக்க வேண்டாம் என்றும், ஐ.பி.எல். அமைப்பாளர்களை வற்புறுத்துமாறு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு மத்திய அரசு அறிவுரை வழங்க வேண்டும் என்றும் நான் அப்போதைய பாரதப் பிரதமரை 26-3-2013 தேதியிட்ட கடிதம் வாயிலாகக் கேட்டுக்கொண்டேன். இலங்கை நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள், நடுவர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்கமாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை ஐ.பி.எல். அமைப்பாளர்கள் அளித்தால் மட்டுமே ஐ.பி.எல். விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாட்டில் நடைபெற தமிழக அரசு அனுமதிக்கும் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவித்திருந்தேன்.

முற்பகல் 10-55

எனது வேண்டுகோளினைப் பரிசீலித்த ஐ.பி.எல். ஆட்சிமன்றக் குழு, சென்னையில் நடைபெறவிருக்கும் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை நாட்டைச் சார்ந்த வீரர்கள் பங்கேற்கமாட்டார்கள் என்ற முடிவை எடுத்தது. அது, இன்னமும் கடைப்பிடிக்கப்படுகிறது. இது எனது தலைமையிலான அரசின் வற்புறுத்தலுக்குக் கிடைத்த வெற்றி. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, 2012 ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு அப்போதைய மத்திய அரசை நான் வலியுறுத்தினேன். 2013 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு தீர்மானம் ஒன்றை அமெரிக்கா கொண்டு வந்தபோது, அதற்கு வலுவூட்டும்விதமாக இந்தியப்

2015 செப்டம்பர் 16] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பேரரசு என்னென்ன திருத்தங்களை அளிக்க வேண்டுமென்பதைக் கோடிட்டுக்காட்டி அப்போதைய பாரதப் பிரதமருக்கு நான் கடிதம் எழுதினேன்.

மேலும், 2013 ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசியபோது, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா இந்த ஆண்டு கொண்டு வருவது ஒருபுறம் இருந்தாலும், தமிழர்கள் நலன் கருதி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து, அதை மற்ற நாடுகளுடன் இணைந்து நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய அரசை நான் கேட்டுக்கொண்டேன். ஆனால், இவற்றுக்கெல்லாம் அப்போதைய மத்திய அரசு செவிசாய்க்கவில்லை. இதன்விளைவு, தற்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. இலங்கை உள்நாட்டுப் போரின்போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் இனப் படுகொலை குறித்து இலங்கை நாட்டுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு எந்த அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்ததோ, அந்த அமெரிக்கா தற்போது இலங்கை போர்க் குற்றத்திற்கு உள்நாட்டு அளவில் அதாவது இலங்கை அரசே குற்றவாளிகளை விசாரித்து நடவடிக்கை எடுத்தால் போதும் என்ற கூற்றை, தனது வெளியுறவுத் துறை துணைச் செயலாளர்மூலம் முன்வைத்திருக்கிறது. இதற்கேற்றாற்போல், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு ஒரு தீர்மானத்தினை அமெரிக்கா கொண்டு வர இருப்பதாகவும் தகவல்கள் வருகின்றன. இது இயற்கை நீதிக்கு முரணானதாகும்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், என்னை 7-8-2015 அன்று எனது இல்லத்தில் சந்தித்தபோது, 19 கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றினை நான் அளித்தேன். அதில், கோரிக்கை எண் 17-ல் இலங்கை உள்நாட்டுப் போரின்போது அப்பாவி இலங்கைத் தமிழர்களைக் கொன்று குவித்து ஓர் இனப் படுகொலையை நிகழ்த்தியவர்களை சட்டத்தின்முன் நிறுத்தி தண்டனை பெற்றுத் தர சர்வதேச அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுமூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளேன்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2015 செப்டம்பர் 16 முற்பகல் 11-00

10-2-2015 அன்று இலங்கை வடக்கு மாகாண சபையில் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இனப் படுகொலை நடத்தப்பட்டது குறித்து இலங்கை அரசு விசாரணை மேற்கொண்டால் நீதி கிடைக்காது என்பதால், சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தி இலங்கை வடக்கு மாகாண முதலமைச்சர் திரு. விக்னேஷ்வரன் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இலங்கை நாட்டில் 21-2-2002 முதல் 15-11-2011 வரை இலங்கைத் தமிழர்கள்மீது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து சுதந்திரமான சர்வதேச விசாரணை முறை மேற்கொள்ளப்பட வேண்டுமென இலங்கை வடக்கு மாகாண சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அளித்த அறிக்கைகளின் அடிப்படையிலும், இலங்கை வடக்கு மாகாணத்தை தங்களுடைய தாய்வீடாகக் கருதும் பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கையை ஏற்கும்வண்ணமும், மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் உலகெங்கும் பரவி இருப்பதைக் கருத்தில்கொண்டும், சர்வதேச சமுதாயம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுவில் உறுப்பினர்களாக உள்ள நாடுகளின் கவனத்தை ஈர்க்கும்வகையில் 1-9-2015 அன்று இலங்கை வடக்கு மாகாண சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தில் சர்வதேச குற்றங்கள் புரிந்தவர்கள்மீது இலங்கையிலேயே விசாரணை மேற்கொள்வது என்பது நீதியைப் பரிகசிப்பது போன்ற செயல் என்றும், இலங்கை மக்களைக் காத்து அவர்களுக்கு சேவை புரிய வேண்டிய இலங்கை நாட்டின் முக்கியமான தூண்கள் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டி நியாயம் வழங்கத் தவறிவிட்டன என்றும் தெரிவித்து, நீதி கிடைக்கும்வகையிலும், அர்த்தம் உள்ள இணக்கப் பாதையில் இலங்கை நாடு செல்லும் வகையிலும் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட சர்வதேச குற்றங்கள் குறித்து விசாரணை மேற்கொள்ள சர்வதேச தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்று சர்வதேச சமுதாயத்தைக் கேட்டுக்கொள்வதோடு, சர்வதேச சமுதாயத்துடன் இணைந்து பணியாற்ற இலங்கை நாட்டுத் தலைவர்கள் முன்வர வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. தற்போது, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுக் கூட்டம் 14-9-2015 முதல் 2-10-2015 வரை நடைபெறுகிறது. 30-9-2015 அன்று இலங்கையின்

2015 செப்டம்பர் 16] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இணக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் பொறுப்புடைமை பற்றிய மனித உரிமைக் குழுவின் ஆணையர் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு விவாதிக்கப்படும். வரைவுத் தீர்மானத்தின்மீது நடவடிக்கை 1-10-2015 மற்றும் 2-10-2015 ஆகிய தேதிகளில் எடுக்கப்படும் என ஐக்கிய நாடுகளுக்கான மனித உரிமைக் குழு தெரிவித்துள்ளது. இலங்கை உள்நாட்டுப் போரின்போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுவினுடைய அறிக்கைமீது இலங்கையின் கருத்து கேட்கப்பட்டிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வந்துள்ளன. இலங்கை அரசு அளிக்கும் பதிலின் அடிப்படையில் இலங்கையே போர்க் குற்றங்கள் பற்றி விசாரித்துக் கொள்ளலாம் என்ற ஒரு தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுவில் நிறைவேற்றக்கூடிய சூழல் தற்போது எழுந்துள்ளது. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய கடமை இந்தியப் பேரரசுக்கு உண்டு. இந்தச் சூழ்நிலையில் போர்க் குற்றங்கள் நிகழ்த்தியோர்மீது சர்வதேச விசாரணை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுமூலம் இந்தியப் பேரரசு எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி தீர்மானம் இந்த மாமன்றத்திலே நிறைவேற்றப்படுவது அவசியம் என நான் கருதுகிறேன். இதைத்தான் ஒட்டுமொத்த தமிழினமும் எதிர்பார்க்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இதற்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் கீழ்க்காணும் தீர்மானத்தினை தமிழ்நாடு அரசின் சார்பில் நான் முன்மொழிகிறேன்:

**தீர்மானம்**

'ஒரு லட்சியத்தைப் பெறுவதும், அதனை ஈடேற்ற எத்தகைய தியாகம் செய்யவும் தயாராகிவிடுவது என்ற உள்ள உரம் பெறுவது என்பதும் சாமான்யமான காரியமல்ல! அந்தச் சாதனையில் நாம் வெற்றி வாகை சூடுவோம் என்ற திட நம்பிக்கை இருத்தல் வேண்டும்' என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் அமுத மொழிக்கு ஏற்ப, ஒட்டுமொத்த தமிழினத்தின் லட்சியத்திற்கும், இலங்கை வடக்கு மாகாண சபையின் தீர்மானங்களுக்கும் வலுசேர்க்கும் வகையிலும், இலங்கைவாழ் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்யும் வகையிலும், இலங்கையில் உள்நாட்டுப் போர் நடைபெற்றபோது சர்வதேச சட்டம் மற்றும் ஜெனிவா ஒப்பந்தத்தில் உள்ள போர் விதிமுறைகளை முற்றிலும் மீறி, போர்க் குற்றங்கள் மற்றும் இனப்

படுகொலை நிகழ்த்தியவர்கள் அனைவர் மீதும் சர்வதேச விசாரணை நடத்தும் வகையிலான வலுவான தீர்மானத்தினை இந்தியாவே ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு அமெரிக்கா உட்பட மற்ற நாடுகளுடன் இணைந்து கொண்டு வர வேண்டும் என்றும், அமெரிக்கா இலங்கைக்கு ஆதரவான நிலையை எடுத்தால், அதனை மாற்ற ராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்தியப் பேரரசை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை கேட்டுக்கொள்கிறது." *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்த பின்னர், இந்தத் தீர்மானத்தினை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைத் தங்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு'

என்று போர் பரணி பாடினார் பாவேந்தர் பாரதிதாசன். உலகத் தமிழர்களுக்கு, உலகளாவிய தமிழர்களுக்கு எந்த மூலையிலே ஒரு இடுக்கண் நேரிட்டாலும், ஓர் இன்னல் விளைந்தாலும் உங்கள் தாய், தமிழ்நாட்டிலே இந்தத் தமிழ்த் தாய் இருக்கிறார், *(மேசையைத் தட்டும் ஒலி)* அதைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்தத் தாய் இருக்கிறார் என்கிற வகையிலே, உலகத் தமிழர்களுடைய காவல் அரணாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உலகத் தமிழ் இனமே இன்றைக்கு வரவேற்கிற ஒரு தீர்மானத்தை *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த மாமன்றத்திலே முன்மொழிந்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை வழிமொழிவதிலும், வரவேற்பதிலும் நான் பெருமைப்படுகிறேன்.

முந்தைய ஆட்சிகளிலும் சரி, கடந்த 4 ஆண்டுக் காலத்திலும் சரி, இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே

எடுத்திருக்கின்ற தொடர் நடவடிக்கைகளையெல்லாம் இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறபோது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கோடிட்டுக்காட்டினார்கள்.

கிரிக்கெட் பந்தயம் இங்கே நிகழ்ந்தபோதுகூட அதை எப்படி தடுத்து நிறுத்தினார்கள்? தமிழகத்திலே இலங்கை வீரர்களுக்குப் பயிற்சி அளித்தபோது அதை எப்படி தடுத்து நிறுத்தினார்கள்? தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியாவின் வடக்குப் பகுதியிலே ஹரியானாவிலே அப்படிப்பட்ட ஒரு முயற்சி வந்தபோதுகூட அதை எப்படி அவர்கள் தடுத்து நிறுத்தினார்கள்? அதைப்போலவே, இந்த அவையிலே சர்வதேச பொருளாதார நெருக்கடியை இலங்கை அரசுக்கு உருவாக்க வேண்டும் என்கிற ஒரு தீர்மானத்தை எந்த அளவுக்கு அழுத்தத்தோடு வலியுறுத்தினார்கள்? அவர்களைப் போர்க் குற்றவாளியாகப் பிரகடனப்படுத்த வேண்டும், ஐ.நா. மன்றத்தின்முன்னே நிறுத்த வேண்டுமென்று 3 ஆண்டுகளுக்கு முன்பாகவே அவர்கள் எந்த உணர்வோடு இந்த அவையிலே எடுத்து வைத்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் கோடிட்டுக்காட்டினார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அந்த வார்த்தையை, உள்ளார்ந்த உணர்வோடு, உள்ளார்ந்த அந்த இலட்சியத்தோடு நான் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். "ஒரு இலட்சியத்தை ஏற்றுக்கொள்வதும், ஏற்ற அந்த இலட்சியத்தைச் செயல்படுத்துவதில் ஏற்படுகிற உரமும் இருக்கிறதே, அந்த உரம்தான் போற்றலுக்குரியது" என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா. அப்படி எந்த இலட்சியம் தமிழர்களுக்கு ஏற்றது என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து நிறுத்துகிறார்களோ (மேசையைத் தட்டும் ஒலி) அதைச் செயல்படுத்துவதிலே, அதை நிறைவேற்றித் தருவதிலே, (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே வெற்றி காண்பதிலே (மேசையைத் தட்டும் ஒலி) யார் வந்தாலும், எந்த நிலை ஏற்பட்டாலும் துணிந்து நிற்கிற அந்த உணர்வை, அந்த உரத்தைப் பெற்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அண்ணா அவர்களின் இதயக்கனி என்று சொல்லப்பட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், உலகத் தமிழ் மக்களின் ஒளி விளக்காய், அவருடைய அரசியல் வாரிசாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை அறிமுகப்படுத்தினார். (மேசையைத் தட்டும் ஒலி) சர்வதேச இனங்களிலே தொன்மை நிறைந்த இனமாக

இருக்கக்கூடியது இந்தத் தமிழ் இனம். ஒரு காலத்திலே பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எப்படி இந்தியா ஓர் அடிமை நாடாக இருந்ததோ, அதைப்போல இலங்கையும் இருந்தது. அன்றைக்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து இந்தியா விடுதலை பெற்றது, தொடர்ந்து இலங்கையும் விடுதலை பெற்றது. ஆகவே, ஒட்டுமொத்தத் தமிழினத்தின் ஒரு தொப்புள் கொடியாக இலங்கைத் தமிழர்கள் இருக்கிறார்கள் என்பதுதான் வரலாறு. அந்தத் தொப்புள் கொடி தமிழர்களுக்கு இன்றைக்கு ஒரு காவல் அரணாய், பாதுகாப்பாய் அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்பதற்காக, (மேசையைத் தட்டும் ஒலி) நியாயம் கிடைக்க வேண்டுமென்பதற்காக, (மேசையைத் தட்டும் ஒலி) சர்வதேச விசாரணை வேண்டும் என்று இலங்கை வடக்கு மாகாண சபை குரல் கொடுப்பதற்கு முன்பாகவே, அங்கே ஒரு தீர்மானம் உருவாவதற்கு முன்பாகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிரதமருக்குக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். வரும்முன் காக்கிற, பேராற்றல் மிகுந்த அரணாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களுக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை வரவேற்று, வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்ற மாண்புமிகு அம்மாவை நான் நெஞ்சாரப் பாராட்டி, வணங்கி அமர்கிறேன்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தை, சுதந்திரத்தை, தனி மனித உரிமையை, மக்களாட்சியினுடைய மாண்பை, நாம் அனுபவித்து வருகிற இந்த உயர் நிலையை எட்டுவதற்கு, மானுட சமூகம் ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாய், இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் தன் இன்னுயிரை ஈந்துப் பெற்றுத் தந்த சுதந்திர, ஜனநாயக, தனி மனித வாழ்வியல் உரிமைகளைத்தான் இந்த நவீன உலகத்து சமூகம், இருபதாம், இருபத்தொன்றாம் நூற்றாண்டில் அனுபவித்து வருகிறது. இந்த நிலையில், உலகத்தில் வேறு எந்த இனத்திற்கும் நேர்ந்திராத ஒரு துயரத்தை, ஓர் இனப் படுகொலையை, உலகத்தின் மிகப் பெரிய ஜனநாயக நாடாக இருக்கிற இந்திய நாட்டின் மிக

அருகில் இருக்கும் இலங்கை நாட்டின் பூர்வ குடிமக்களாய் இருக்கிற, இலங்கைத் தமிழ் மக்களை, அவர்களுக்கான அரசியல், சமூக, பொருளாதார உரிமைகளை மறுத்து, அந்த நாட்டின் சிங்களப் பேரின அரசு தொடர்ந்து ஓர் இன ஒடுக்குமுறையை நடத்திவந்தது. அப்படிப்பட்ட அந்த அடக்குமுறையிலிருந்து விடுதலை பெறுவதற்காக தமிழ்ச் சமூகம் போராடியது. அந்தப் போராட்டத்தை நசுக்குவதற்கான நடவடிக்கையிலிருந்து அந்த மக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொண்டு, அரசியல் விடுதலைக்காகப் போராடிய அந்தக் காலத்தில், இழந்த உயிர்களினுடைய எண்ணிக்கை, அதுவும் அந்த அரசாலேயே உள்நாட்டுப் போரிலே நடத்தப்பட்ட குற்றங்கள் எண்ணிலடங்கா. அப்படிப்பட்ட அந்தப் போரால் அந்த மக்கள் பட்ட துன்பத்திற்கும், துயரத்திற்கும், நீதி வேண்டும் என்று தமிழ்ச் சமூகத்தினுடைய நீதிக்காக, அரசியல் விடுதலைக்காக இந்தத் தமிழ்ச் சமூகத்தினுடைய தலைமைத் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றத்திலே 2011-லே தீர்மானம் கொண்டுவந்தார்கள். இலங்கையின்மீது நடவடிக்கை கோரும் முழக்கத்தை யாரும் முன்வைக்க தயங்கிய நேரம் அது. 2011-லே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சி அரியணையில் ஏறிய பிறகுதான், இலங்கையின்மீது, பொருளாதாரத் தடை வேண்டும் என்றும், இலங்கைத் தமிழர்களுடைய எதிர்கால நலன் கருதி, அவர்களுக்குத் தனி ஈழம் அமைப்பதற்கு, இலங்கையிலிருந்து, புலம் பெயர்ந்த தமிழர்களிடத்திலே பொது வாக்கெடுப்பு நடத்திட வேண்டும் என்றும், அதுபோன்று இலங்கைத் தமிழர்கள் புலம் பெயர்ந்த நாடுகள் சம்பந்தப்பட்ட தீர்மானத்தையும், ஐ.நா. பாதுகாப்புக் குழுவில் இந்தியா தீர்மானம் கொண்டு வரவேண்டுமென்கிற தீர்மானத்தையும் கொண்டுவந்தார்கள். அதன் பிறகுதான், சர்வதேச சமூகமும், இந்தியாவும் அப்படிப்பட்ட நிலைக்கு அவர்களை வலியுறுத்துகிற நிலை ஏற்பட்டது. இப்பொழுதும்கூட, ஐ.நா. மனித உரிமைகள் குழுவிலே அமெரிக்கா இலங்கைக்கு ஆதரவான நிலை எடுத்தால், இலங்கையின்மீது சர்வதேச விசாரணை வேண்டும் என்கின்ற வலிமையான தீர்மானத்தை இந்தியாவே கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகச் சரியான நேரத்திலே, இன்று தமிழ்நாடு

[திரு. உ. தனியரசு] [2015 செப்டம்பர் 16

சட்டமன்றத்திலே முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிந்து, அந்தத் தீர்மானம் வெற்றிபெற வாழ்த்தி, நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களுடைய வாழ்வாதாரத்தை, உரிமையைப் பெற்றுத் தருகின்ற வகையில், மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்து இலங்கைத் தமிழர்களுக்காக இதே சட்டமன்றத்தில் பல முறை அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கின்ற முறையிலே, தீர்மானங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதல்வராக வந்தவுடனேயே 8-6-2011 அன்று தீர்மானம் கொண்டுவந்தார்கள்; 27-3-2013-லே தீர்மானம் கொண்டுவந்தார்கள்; 24-10-2013-லே தீர்மானம் கொண்டு வந்தார்கள்; 12-11-2013-லே தீர்மானம் கொண்டுவந்தார்கள். அதாவது, இந்தியா, இலங்கைமீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும், இலங்கையை நட்பு நாடு என்று சொல்லக்கூடாது, தமிழகத்தில் நடக்கின்ற ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளில், இலங்கை கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் பங்கேற்கக் கூடாது என்று ஒவ்வொரு முறையும் தமிழகத்தை, தமிழக மக்களைக் காக்கின்ற வகையில் தீர்மானங்களையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, தமிழர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ, அவர்களை தொப்புள்கொடி உறவாக பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமை என்ற முறையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து பாதுகாப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

அந்த அடிப்படையிலே, ஒவ்வொரு முறையும், தமிழர்களுக்கு எப்பொழுது பிரச்சினை வந்தாலும், அதற்கு தமிழக சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டு வந்திருக்கின்றார்கள் என்று சொன்னால், அதற்குக் காரணம், உலக அளவிலே இருக்கின்ற தமிழர்களைக் காக்கின்ற தலைவியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றார்கள் என்பதுதான்.

(மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலேதான், இன்றையதினம் இலங்கை வடக்கு மாகாண சபையிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. உலகளவில் நடைபெறுகின்ற சர்வதேச சட்டப்படி, ராஜபக்சேவை போர்க் குற்றவாளியாக சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டுமென்று கூறுவதோடு, ஜெனீவா போர் ஒப்பந்தத்தையும் மீறி செயல்பட்டிருப்பதைக் கண்டித்து, மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த அரசினர் தனித் தீர்மானத்தை அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக வரவேற்று, வழிமொழிந்து அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வசிக்கும் மக்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் வசிக்கக்கூடிய தமிழர்களின் உண்மையான பாதுகாவலராகத் திகழக்கூடியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 2011-ல் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு, இலங்கைக்கு எதிராக, இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்பாக, ஒட்டுமொத்தத் தமிழர்களைப் பாதுகாக்க இம்மாமன்றத்தில் பல்வேறு தீர்மானங்களை இயற்றியுள்ளார்கள். அதற்கு என்றென்றும் வரலாறே சாட்சிகள். இனி தமிழகத்தின் புதிய தலைமுறைகளுக்கு வழிகாட்டியாக இது அமையும். இலங்கைக்கு எதிரான பொருளாதாரத் தடை, இலங்கை முன்னாள் அதிபர் ராஜபக்சேவை போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும், இலங்கையை நட்பு நாடாகக் கருத வேண்டாம், ஐ.நா. சபையில் மனித உரிமை அமைப்பின்கீழ் ராஜபக்சேவை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென்று அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு தர வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்துள்ள அரசினர் தனித் தீர்மானம், இலங்கையை சர்வதேச விசாரணைக்குப் பரிந்துரை செய்வதற்கான நடவடிக்கைக்கு வலுசேர்ப்பதாக உள்ளது. ஈழத் தமிழர்களின் ஜனநாயகப் போராட்டங்களை வலுப்படுத்துவதாகவும், இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுப்பதாகவும் உள்ளது.

[திரு. ஆ. நாராயணன்] [2015 செப்டம்பர் 16

இலங்கை அரசுக்கு எதிராக, தாயாக, தமிழ் மக்களின் அறவழிப் போராட்டங்களை முன் எப்போதும் இல்லாத வகையில் நடத்தி, ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைக் குழுவின்முன்பு சர்வதேச விசாரணைக்கு இலங்கை அரசை உட்படுத்த வலியுறுத்த வேண்டும்.

"வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்
தோளெங்கள் வெற்றித் தோள்கள்.
கங்கையைப்போல் காவேரிபோல் கருத்துக்கள்
ஊறுமுள்ளம் எங்கள் உள்ளம்!
வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய் கின்றதமிழ் எங்கள்
மூச்சாம்!"

என்ற பாரதிதாசன் அவர்களின் பாடலுக்கேற்ப, இந்த அரசினர் தனித் தீர்மானத்தைக் கொண்டுவந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும், தலைவர் சார்பாகவும் நன்றி கூறி, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்த அரசினர் தனித் தீர்மானத்தைப் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நான் முதற்கண் மனதார வரவேற்கிறேன்.

கடந்த நான்காண்டு காலத்தில் ஈழத் தமிழ் மக்களுக்கு எப்பொழுதெல்லாம் இன்னல் ஏற்படுகின்றதோ அப்பொழுதெல்லாம் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதனுடைய தொடர்ச்சியாக இன்றும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 2009-2010 ஆம் ஆண்டுகளில் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், போர் விதிமுறை மீறல்கள் குறித்து, சுதந்திரமான சர்வதேச விசாரணை வேண்டும் என்பதை அமெரிக்காதான் கடந்த காலங்களில் முன்வைத்தது. ஆனால், "வெண்ணெய் திரண்டு வருகின்றபோது தாழி உடைந்த கதையாக" இப்போது ஈழத்திலே நடந்த அனைத்துவிதமான மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா.-வில் அறிக்கை வைத்து, இலங்கையில் போர்க் குற்றம்

2015 செப்டம்பர் 16] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

புரிந்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணத்தில், அமெரிக்கா தன்னுடைய நிலைப்பாட்டை முழுவதுமாக மாற்றியிருக்கிறது. எனவே, இது ஈழத் தமிழ் மக்களுக்கு இழைக்கக்கூடிய மிகப் பெரிய கொடுமையாக, அநீதியாக முடிந்துவிடும். எனவேதான், அமெரிக்கா தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டாலும்கூட, இந்திய அரசு தானாக முன்வந்து, ராஜதந்திர ரீதியாக சர்வதேச சுதந்திரமான விசாரணைக்கு இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, இன்று அவையிலே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அரசினர் தனித் தீர்மானம் கொண்டுவரப்பட்டதற்கு புதிய தமிழகம் கட்சியின் சார்பாக மீண்டும் வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

முற்பகல் 11-20

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலுக்கு அப்பால் இருந்தாலும், "இலங்கைத் தீவிலே, ஈழப் பகுதியிலே வாழக்கூடிய தமிழ் சொந்தங்கள் அனாதைகளல்ல, அவர்கள் எமது தொப்புள்கொடி உறவுகள்" என்பதை நிரூபிக்கக்கூடிய வகையில், தமிழக சட்டமன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு முதன் முதலாக 2011-லே ஜுன் மாதம் 8 ஆம் தேதி தொடங்கி, இன்றுவரை இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக மிக வலுவான, அழுத்தமான தீர்மானங்களை நிறைவேற்றி வருகின்றார்கள்.

இலங்கையிலே ஆட்சி செய்து கொண்டிருந்த ராஜபக்சே தனக்கு எதிராக சீனாவுடன் உறவு கொண்டிருந்தார் என்ற அடிப்படையிலே, அமெரிக்கா, ஈழ மண்ணிலே நடைபெற்ற அந்த மிகப் பெரும் இனப் படுகொலைக்கு எதிராக முதலிலே ஒரு தீர்மானம் கொண்டு வந்தாலும்கூட, இப்பொழுதுள்ள ஆட்சியாளர்கள் தங்களுக்கு சாதகமாக இருக்கின்றார்கள் என்ற அடிப்படையிலே, அந்தத் தீர்மானத்தை மாற்றி, சர்வதேச விசாரணை தேவையில்லையென்ற ஒரு நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றது.

நேற்றையதினம்கூட, ஜெனீவாவிலுள்ள ஐ.நா.-வினுடைய மனித உரிமை ஆணையத்திலே பேசிய இலங்கை வெளி விவகாரத் துறை

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2015 செப்டம்பர் 16

அமைச்சர் சமரவீரா, 'நாங்கள் ஓர் அரசியல் அமைப்பு சபையை-Constituent Assembly-ஐ ஏற்படுத்துவோம்; நடைபெற்ற இனப் படுகொலைகள் குறித்து சர்வதேச விசாரணை தேவையில்லை; நாங்களே ஒரு Truth Commission-விசாரணை ஆணையத்தை அமைப்போம்' என்று பேசியிருக்கக்கூடிய ஒரு நிலையைப் பார்க்கின்றோம்.

நாம் வாழக்கூடிய இந்தக் காலகட்டத்தில், 1980-களில், ஐரோப்பாவிலே, போஸ்னியா-ஹெர்செகோவினாவிலே மிகப் பெரிய இனப் படுகொலை நடைபெற்றது. அதுபோன்று, கொசாவாவிலும் நடைபெற்றது. அப்போதெல்லாம் சர்வதேச குற்றவியல் போர் குற்றத் தீர்ப்பாணையம் அமைக்கப்பட்டு, அந்தப் போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டிருக்கின்றது. அதே நிலைதான் இலங்கையிலே. அந்தப் போர்க் குற்றங்களிலே ஈடுபட்ட அனைவரும், ஐ.நா.-வினால் safe havens - பாதுகாப்பு வளையங்கள் என்று சொல்லப்பட்ட பகுதிகளிலும்கூட கொத்துக் கொத்தாகக் குண்டுகளை வீசியவர்கள். நாங்களே விசாரித்துக்கொள்வோம் என்று அவர்கள், சொல்வது நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாதது. அதனால்தான், இலங்கையினுடைய வடக்கு மாகாண சபை, தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முன்னால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதே அவையிலே "ஐ.நா.-வினுடைய பாதுகாப்பு அவையே இதை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சர்வதேச தீர்ப்பாணையம் அமைக்க வேண்டும்" என்று சொன்னார்கள். இப்போது அந்த விசாரணையை மழுங்கடிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில், இந்திய அரசு நிச்சயமாக ஒரு சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அமெரிக்கா அதற்குக் குறுக்கே நின்றாலும்கூட, ராஜதந்திர நடவடிக்கைகள் எடுத்து, அதை முறியடிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்திருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களேகூட, தங்களுடைய உரையிலே குறிப்பிட்டதுபோல, இலங்கைத் தமிழர்கள் மட்டுமல்ல, இந்தியத் தமிழர்கள் மட்டுமல்ல, உலகம் முழுவதுமுள்ள தமிழர்களுடைய உள்ளக் கிடக்கையைப் பிரதிபலிக்கக்கூடிய வகையிலே, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக உளமார வரவேற்கின்றேன்.

2015 செப்டம்பர் 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

**திரு. அ. கணேஷ்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு உலகத்தில் வாழும் அத்தனைத் தமிழர்களும் எதிர்நோக்கியிருக்கின்ற அவர்களில் உணர்வைப் பிரதிபலிகின்ற தீர்மானம், தமிழக சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் முன்மொழியப்பட்டிருப்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் முதலில் மனதார வரவேற்கிறேன்.*

*கடந்த காலங்களில், ஏற்கெனவே இதேபோன்று இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் குறித்து உள்நாட்டிலேயே விசாரணை நடத்தப்படலாம் என்று* L.L.R.C. *என்ற ஓர் உள்நாட்டு விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டு, அந்த விசாரணை கமிஷன் தோல்வியடைந்த சூழ்நிலையில், 2013 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம், ஐ.நா. மனித உரிமை ஆணையக் கவுன்சில் கூட்டத்தில், பசுமைத் தாயகத்தின் சார்பாக முன்னாள் நடுவண் சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அவர்கள் தனித் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். அதனைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு ஐ.நா. சபையின் விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டு, அதனுடைய அறிக்கை இன்றைக்குத் தாக்கல் செய்யக்கூடிய சூழ்நிலையில் உள்ளது.*

*முற்பகல் 11-25*

*இதன் தொடர்ச்சியாக, மரியாதைக்குரிய நவநீதம்பிள்ளை அவர்களுக்குப் பிறகு பொறுப்பேற்ற ஐ.நா. சபையின்* High Commissioner, Zeid Ra'ad Al Hussein *என்பவர் தன்னுடைய முன்னுரையிலேயே இந்த விசாரணையில் பல அதிர்ச்சிகரமான தகவல்களும், வேதனை அளிக்கின்ற தகவல்களும் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், இந்தத் தீர்மானம் வருகின்ற 1 ஆம் தேதி விவாதத்திற்கும், 2 ஆம் தேதி வாக்கெடுப்புக்கும் விடக்கூடிய சூழ்நிலையில், இலங்கை அரசே இதுகுறித்த நீதி விசாரணையை மேற்கொள்ளலாம் என்ற ஒரு தீர்மானத்தை அமெரிக்கா கொண்டுவரப் போவதாக செய்திகள் கசிந்த நிலையில், குறிப்பாக அங்கு புலம் பெயர்ந்த, அந்தப் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் உள்ளக் குமுறல்களுக்கெல்லாம் இன்றைக்கு விடிவு பிறக்கின்றவகையில், இன்றைக்கு தமிழக அரசின் சார்பாகக் கொண்டு வரப்பட்டிருக்கிற தீர்மானத்தை*

வரவேற்கிறேன். அதுமட்டுமல்லாமல், International Criminal Court (I.C.C.) மூலமாக இந்த விசாரணை மேற்கொள்ள வேண்டும் அல்லது தனி நீதிமன்றம் அமைத்து இந்த விசாரணையை சுதந்திரமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற முறையில் இந்த அவையில் தீர்மானம் கொண்டு வந்திருப்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மனமார வரவேற்கிறேன்.

மேலும், இந்தத் தீர்மானத்தின்மீது வருகின்ற 1 ஆம் தேதி நடைபெறவிருக்கும் விவாதத்தில், மீண்டும் பாட்டாளி மக்கள் கட்சியின் இளைஞர் அணித் தலைவர், அன்புமணி ராமதாஸ் அவர்கள் கலந்துகொண்டு உரையாற்ற இருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக இந்தத் தீர்மானத்தை மனமார வரவேற்று அமைகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்களுக்காக, தமிழர் நலனுக்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை காங்கிரஸ் கட்சி வரவேற்கிறது.

ஏற்கெனவே எங்கள் அன்புக்குரிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராஜீவ் காந்தி-ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தில் 11-வது Amendment-ஐத்தான் நாங்கள் முன்வைத்தோம். ஆனால், நம்முடைய ஈழத் தமிழ் மக்களை இலங்கையிலே படுகொலை செய்திருப்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அந்தக் கொடூரச் செயலைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது சர்வதேச விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் காங்கிரஸ் கட்சியின் விருப்பம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமெரிக்கா எதிராக இருந்தாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, ராஜதந்திர முறையிலே, மத்திய அரசை நாம் வலியுறுத்தி, அவர்களுக்கு அழுத்தம் கொடுத்து, சர்வதேச விசாரணை நடத்தி, அந்தக் கொடூரக் குற்றங்களை செய்தவர்களுக்குத் தக்க தண்டனை கொடுக்க வேண்டுமென்று கூறி, இந்த நேரத்திலே இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அமைகிறேன். வணக்கம்.

2015 செப்டம்பர் 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

***திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இலங்கையில் இருக்கக்கூடிய தமிழர்களும், உலகம் முழுவதும் இருக்கக்கூடிய தமிழ்ச் சமுதாயமும் வாழ்த்தக்கூடிய முறையில், பாராட்டக்கூடிய முறையில், அங்கீகரிக்கக்கூடிய முறையில் தமிழக சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

சர்வதேச போர்க் குற்றவாளியாக, உலக அரங்கில் அம்பலப்படுத்தப்பட்டு நிற்கும் இலங்கை அரசு, நமது நாட்டின் தொப்புள்கொடி உறவுகளைக் கொன்று குவித்து, அதை நியாயப்படுத்த பலமுறை முயன்று அதிலெல்லாம் தோல்வி கண்டபோது, தமிழகத்தினுடைய சட்டமன்றத்திலே பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றி, தமிழ்ச் சமுதாயத்தைப் பாதுகாத்த இந்த அரசையும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இலங்கையில் Common Wealth மாநாடு நடைபெற்றபோது அதில் கலந்து கொள்ளக்கூடாது என்பதான தீர்மானமும், I.P.L. Cricket போட்டியை தமிழ்நாட்டில் நடத்தக்கூடாது என்று இந்திய கிரிக்கெட் வாரியத்தை வலியுறுத்தக்கூடிய முறையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அனுப்பிய கடிதமும், 2012 ஆம் ஆண்டில் மனித உரிமைக் குழு முன்பு அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியப் பேரரசு ஆதரிக்க வேண்டுமென்று தமிழக சட்டமன்றத்திலே கொண்டுவந்து நிறைவேற்றிய தீர்மானமும், 2013 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையிலே நம்முடைய குரல்கள் ஒலிக்கவும், மனித உரிமை மீறல்கள், இனப் படுகொலைகள் போன்றவற்றிற்கு சட்டத்தின்முன் நிறுத்தி தண்டனை வழங்க சுதந்திரமான, சர்வதேச விசாரணையை ஐக்கிய நாடுகள் சபையிலும், மனித உரிமைகள் குழுமுன் கொண்டு வந்திருக்கக்கூடிய பல்வேறு தீர்மானங்களும், இலங்கை அரசு போர்க் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டு, சொந்த ஊர்களில் தமிழர்கள் குடியமர்த்தப்பட வேண்டும் என்பதற்கான தீர்மானமும், இலங்கை அரசின்மீது இந்திய அரசு பொருளாதாரத் தடை விதிக்க

வேண்டும் என்று 8-6-2011 அன்று கொண்டு வந்து இருக்கக்கூடிய தீர்மானமும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நம்முடைய தமிழகத்தினுடைய சட்டமன்றத்தில், வரலாற்றுத் தீர்மானங்களாக இங்கே முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழர்களின் நலன் காக்கவும், கச்சத் தீவை மீட்கவும், இனப் படுகொலை செய்த இலங்கை அரசை உலக அரங்கில் போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என்கிற தீர்மானங்களும் இதே அவையில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டுள்ளன.

*முற்பகல் 11-30*

தற்போது, இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும், தமிழர்களின் உரிமையை நிலைநாட்டவும், தமிழர்களின் உடைமைகள் பாதுகாக்கப்படவும் பல்வேறு நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்க வேண்டுமெனவும் கோரி வருகிறோம். தமிழர்களின் நலன்களைப் பாதுகாத்திட வேண்டுமென்ற சிந்தனைக்கு தற்போதைய சூழ்நிலையில், அமெரிக்க அரசின் நடவடிக்கைகள் நேர் எதிராக உள்ளதால், நமது உரிமைகளை நிலைநாட்ட வேண்டியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு இலங்கைக்கு ஆதரவான நிலையை அமெரிக்கா எடுக்கத் தொடங்கியுள்ளதால், ராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுக்க மத்திய அரசை வலியுறுத்தும் தமிழக சட்டமன்றப் பேரவையின் இத்தீர்மானம், இலங்கைவாழ் தமிழக மக்களுக்கும், உலகம் முழுவதும் வாழக்கூடிய தமிழ்ச் சமுதாயத்திற்கும் நம்பிக்கையினை ஊட்டும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் இனத்தின் இலட்சியத்திற்கும், இலங்கை வடக்கு மாகாண சபையின் தீர்மானங்களுக்கும் வலுசேர்க்கும் வகையிலும், இலங்கைவாழ் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கச்செய்யும் வகையிலும், இலங்கையில் உள்நாட்டுப் போர் நடைபெற்றபோது, சர்வதேச சட்டம் மற்றும் ஜெனீவா ஒப்பந்தத்திலுள்ள போர் விதிமுறைகளை முற்றிலும் மீறி, போர்க் குற்றங்கள் மற்றும் இனப் படுகொலைகள் நிகழ்த்திய அனைவர்மீதும் சர்வதேச விசாரணை நடத்திடும் வகையிலும், வலுவான தீர்மானத்தினை இந்தியாவே ஐக்கிய நாடுகளின் சபையின் மனித உரிமைக் குழு முன்பு அமெரிக்கா உட்பட மற்ற நாடுகளுடன் இணைந்து கொண்டு

*2015 செப்டம்பர் 16]* *[திரு. எம். ஆறுமுகம்]*

*வர வேண்டும் என்றும், அமெரிக்கா, இலங்கைக்கு ஆதரவான நிலையை எடுத்தால், அதனை மாற்ற ராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இத்தீர்மானத்தை வழிமொழிந்து, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரின்போது, அத்துமீறல்கள், போர்க் குற்றங்கள் நிகழ்ந்தன. பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், கோயில்கள் போன்றவை தகர்க்கப்பட்ட கொடுமைகள் நடைபெற்றன. இந்நிலையில், நிலம் இழந்து, புலம் இழந்து, வீடிழந்து, புலம் பெயர்ந்து சென்றுள்ள தமிழ் மக்கள் படும் அவதிகளுக்கெல்லாம் நியாயம் கிடைக்கக்கூடிய வகையிலும், இலங்கைவாழ் தமிழ் மக்கள் வீடு, நிலம், சுகாதாரம், கல்வி, வேலை போன்றவை பெற்று நல்வாழ்வு பெறவும்; புலம் பெயர்ந்த தமிழர்கள் மீண்டும் தாய்நாடு திரும்பி வாழக்கூடிய நம்பிக்கையைப் பெறுவதற்குமான ஒரு சூழ்நிலையை உண்டாக்க வேண்டியிருக்கிறது. இத்தேவைகள், இந்தத் தீர்மானத்திலே மிகச் சுருக்கமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, போர்க் குற்றங்கள் செய்தவர்கள், பெரும் படுகொலைகள் புரிந்தவர்கள் தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும், அங்கே நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதற்காக நாம் ஏற்கெனவே தீர்மானங்கள் போட்டிருக்கின்றோம். அந்தத் தீர்மானங்களைப் போட்ட பிறகு, அடிப்படையிலேயே பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒன்று, வடக்கு மாகாணத்தில் ஓர் ஆட்சி அமைந்திருக்கிறது; இரண்டு, இலங்கையிலும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது; எதிரெதிராக இருந்த இரண்டு பெரிய கட்சிகள் சேர்ந்து ஆட்சி அமைத்திருக்கின்றன. புதிதாகப் பொறுப்பேற்றுள்ள பிரதமர், இலங்கையே அந்த விசாரணையை நடத்தும் என்று பேசியிருக்கிறார். ஏற்கெனவே ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு அமெரிக்கா தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது, அந்தத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்ட நிலையிருந்தது. தற்போது,*

[திரு. அ. சவுந்தரராசன்] [2015 செப்டம்பர் 16

அந்த நிலையிலேயே மாற்றம் ஏற்பட்டு, அமெரிக்காவே இப்போது சர்வதேச விசாரணைக்கு எதிரான ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கும் மாற்றங்கள் எல்லாம் நிகழ்ந்திருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், சர்வதேச Jurists-ஐக் கொண்ட ஓர் அமைப்பை ஏற்படுத்த வேண்டும்; அந்த Jurists-ல் இலங்கையினுடைய தலைமை நீதிபதி இடம் பெற்றிருக்க வேண்டும்; பெரும்பான்மையினர் எடுக்கின்ற முடிவுக்கு கட்டுப்படுவது என்ற விதியைக் கொண்ட, Jurists-ஐக் கொண்ட ஓர் ஏற்பாட்டைச் செய்வது பொருத்தமாக இருக்கும். இலங்கை அரசு தப்பித்துக்கொள்வதற்கு நாம் இடம் தராமல் இருப்பதற்கு, சிறந்த diplomacy ஆக இது இருக்கும் என்று நான் கருதுகிறேன். போர்க்குற்றம் புரிந்தவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு, நாம் அழுத்தம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

அமெரிக்க நாடு ஐ.நா. சபையின் மனித உரிமைக் குழுவுக்கு முன்னால் குற்றவாளியாய் நிற்க வேண்டிய ஒரு நாடாக இருக்கிறது. இன்றைக்கு உலகத்தில் 5 இலட்சம் அகதிகளை உருவாக்கி, பெரும் நெருக்கடியை உருவாக்கிய ஒரு நாடாக அந்த நாடு இருந்து கொண்டிருக்கிறது. அமெரிக்கா, தங்கள் நலன் சார்ந்து, geo-political interest-க்காக, அவ்வப்போது நிலைமையை மாற்றிக்கொள்ளக்கூடிய கொள்கையைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறது; இப்பிரச்சினையிலும் அக்கொள்கையைத்தான் அமெரிக்கா பின்பற்றுகிறது. எனவே, இலங்கைவாழ் தமிழ் மக்கள் நல்வாழ்வு பெறவும், புலம் பெயர்ந்த தமிழர்கள் மீண்டும் தாய்நாடு திரும்புகிற நம்பிக்கையைப் பெறவும், குற்றவாளிகள் தண்டிக்கப்படவும், சர்வதேச Jurists-ஐக் கொண்ட ஓர் அமைப்பை ஏற்படுத்துவதற்கான முறையிலே இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் கேட்டுக்கொண்டு, இந்தத் தீர்மானத்திலுள்ள அனைத்துணர்வுகளையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் இந்த மாமன்றத்தில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற தீர்மானத்தை நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். It is a timely resolution; இத்தீர்மானம்

*2015 செப்டம்பர் 16]* [திரு. துரைமுருகன்]

இப்போது தேவையான ஒன்று. எனவே, இத்தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆதரிக்கின்றேன். இத்தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டும் என்ற நோக்கம் வந்ததற்குக் காரணம், அமெரிக்கா தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டிருக்கிறது என்பதுதான். அமெரிக்கா, உலகத்தில் பெரிய நாடு என்று கருதப்படுகிறது; ஜனநாயக நாடு என்று சொல்லப்படுகிறது.

*முற்பகல் 11-35*

பணக்கார நாடாக இருக்கின்ற காரணத்தால், Big Brother attitude-உடன் அமெரிக்கா நடந்து கொண்டிருப்பது ஜனநாயகத்திற்கு விரோதம் அல்ல; மனிதத் தன்மைக்கு விரோதம் அல்ல. காரணம், அதே அமெரிக்காதான், சர்வதேச விசாரணை தேவை என்று சொன்னது. பிறகு, இன்றைக்கு சர்வதேச விசாரணை தேவையில்லை, உள்நாட்டு விசாரணையே போதும் என்று சொன்னதும் அதே அமெரிக்காதான். அவர்கள் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டாலும், நாம் நிலைப்பாட்டை மாற்ற முடியாது. அதைத்தான், மாண்புமிகு முதல்வர் அவர்கள், இங்கு அழுத்தந் திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள்; இனப் படுகொலை செய்தவர்கள் அனைவர்மீதும் சர்வதேச அளவில் விசாரணை நடத்தும் வகையிலான வலுவான தீர்மானத்தினை, இந்தியாவே ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு அமெரிக்கா உட்பட மற்ற நாடுகளுடன் இணைந்து கொண்டு வர வேண்டும் என்றும், அப்படி முடியாவிட்டால், இலங்கைக்கு ஆதரவான நிலை எடுத்தால், அதனை ராஜதந்திர முறையில் அணுக வேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இதில் யாருக்கும், எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் கிடையாது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏன் இந்திய அரசை இவ்வளவு வற்புறுத்தியிருக்கிறார்கள் என்றால், 2012-2013 ஆம் ஆண்டுகளில் ஐ.நா. சபையில், இலங்கைப் பிரச்சினையில், அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது. எனினும், கடந்த ஆண்டு அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தின்போது, அதுதொடர்பான வாக்கெடுப்பில் இந்தியா கலந்து கொள்ளவில்லை. எனவே, இதில் உறுதியாக இருக்க வேண்டும் என்றுதான், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்திருக்கிறார்கள். இதில் மற்றவர்களும் தெரிவித்ததைப்போல், இதில் யாருக்கும் மாறுபாடான கருத்து

இல்லை. இதில் சர்வதேச விசாரணை தேவை என்று எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகம், தன்னுடைய பொதுக் குழு, செயற்குழு, டெசோ மாநாடுகளில் பல தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கின்றது. 2-11-2012 அன்று, இந்த மன்றத்தினுடைய உறுப்பினரும், எங்கள் கட்சித் தலைவராகவும் இருக்கிற தளபதி, திரு. மு.க. ஸ்டாலின் அவர்களும், திரு. டி.ஆர். பாலு அவர்களும் ஐக்கிய நாடுகள் சபையின் துணைப் பொதுச் செயலாளர், Thiru Eliasson அவர்களை சந்தித்து, ஒரு மனுவைக் கொடுத்தார்கள். அதேபோல், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையத்தின் தலைவராக இருந்த திருமதி நவநீதம்பிள்ளை அவர்களை ஜெனீவாவில் சந்தித்து, 6-11-2012 அன்று, இதற்கு ஒரு சர்வதேச விசாரணை தேவை என்று குரல் கொடுத்தார்கள். இவ்வளவெல்லாம் நடந்திருக்கின்றபோதும், ராஜபக்சே மறுத்ததற்குப் பிறகும்கூட, அவருக்குப் பின்னர் வந்திருக்கிற திரு. மைத்ரிபாலா சிறிசேனா அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். இலங்கை அரசிடம் அறிக்கை தந்தாகிவிட்டது. இந்த நேரத்தில், அமெரிக்கா இவ்வாறு நடந்துகொள்வது தவறான நடவடிக்கை. இது பாராட்டக்கூடியதல்ல. ஆனால், அமெரிக்காவைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. இந்திய நாடு, இதில் அழுத்தந்திருத்தமாக இருக்க வேண்டும். தமிழ்நாடு, இந்தியாவின் ஒரு பகுதி. எனவே, தமிழருக்கு ஏற்படும் இழப்பினை இந்தியாவிற்கு ஏற்படும் இழப்பாகக் கருத வேண்டும் என்பதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருமுறை மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறார்கள். எனவே, இந்தத் தீர்மானத்தை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள், சுருக்கமாகப் பேசுங்கள்.

***திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதைக்காமல் செதுக்கிடும் சிற்பியின் கவனத்துடன், அர்த்தமுள்ள இணக்கப்பாதையில் இலங்கை சென்றிடும் வகையில், அங்கு நிகழும் எந்த நல்ல மாற்றத்தையும் சிதைத்திடாமல், பூகோள அரசியலில், geo-political changes-நிகழும் மாற்றங்களைக் கருத்திற்கொண்டு, வார்த்தை ஒவ்வொன்றையும் அர்த்தத்துடன் செதுக்கிய இந்தத் தீர்மானத்தினை முழு மனதுடன் வரவேற்கிறேன். இந்தத் தீர்மானம் மூன்று தத்துவங்களின் அடிப்படையில் இயற்றப்பட்டிருக்கிறது. மூன்று செயல்பாடுகளை செய்யச் சொல்லி

2015 செப்டம்பர் 16] [திரு. க. பாண்டியராஜன்]

மத்திய அரசை வலியுறுத்துகிறது. முதல் தத்துவம், Principle of natural justice. இரண்டாவது தத்துவம், உலகத்திலுள்ள 10 கோடி தமிழர்களின் நல்வாழ்விற்கு, ஒரு குரல் எழுந்து ஒலிக்க வேண்டும், அது தமிழகத்தின் குரலாக இருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாவது தத்துவம், வடக்கு மாகாண சபையின் தீர்மானம். அந்த வடக்கு மாகாண சபையின் அதிகாரங்கள் என்ன என்பது ஒரு பக்கம் இருந்தாலும், அந்தத் தீர்மானத்திற்கு வலு சேர்க்க வேண்டும். இந்த மூன்று சித்தாந்தங்களின் அடிப்படையில், கேட்டிருக்கும் மூன்று செயல்பாடுகளில், அடித்தளம் வகுப்பது, India has greater leverage over US than Sri Lanka has. இலங்கைக்கு அமெரிக்காமீது இருக்கும் வலிமையைவிட, நமக்கு அதிக வலிமை இருக்கிறதென்று மத்திய அரசாங்கத்தை உணர வைப்பது இந்தத் தீர்மானத்தின் குறிக்கோளாகும். இன்று, geo-political changes ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்க சார்பு நிலையை இலங்கை அரசாங்கம் எடுக்கிறது. சீன அரசாங்க சார்பு நிலை இருந்ததிலிருந்து இலங்கை மாறியதால் அமெரிக்கா இன்று ஒரு தீர்மானத்தை முன்வைக்கிறது.

முற்பகல் 11-40

இந்தத் தீர்மானத்தை, இந்தியாவே முன்னெடுத்து செயல்படுத்தும் வலிமை, இந்தியாவிற்கு உள்ளதென்று மத்திய அரசை உணர வைக்கும் தீர்மானம் இது. ஆங்கிலத்தில் Culture eats strategy for breakfast என்று சொல்வார்கள். கலாச்சாரம் சார்ந்த உறவுகள், கலாச்சாரம் சார்ந்த குரல்கள், வியூகங்களுக்குமேல் வலிமை பெற்றது என்று இதற்கு அர்த்தம். இந்திய அரசாங்கம் தற்போது அமைத்திருக்கும் வியூகம், என்னதான் நடந்தாலும் அமைதியாக இருப்போம். அவரவர்கள் ஒரு தீர்மானம் போடட்டும். அந்த மாதிரி ஒதுங்கியிருக்கும் வியூகத்தை வகுத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது இந்திய அரசாங்கம். நமது உணர்வை, தமிழர்களின் உணர்வை, உலகத் தமிழர்களின் உணர்வை மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லும் தீர்மானம் இது. தன் வலிமையை, தான் உணர வேண்டுமென்று இன்று geo-political Axis என்ற முறையில், ஜப்பான், கொரியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் உள்ளடங்கிய geo-political Axis-ஐ உருவாக்குவதற்கு அமெரிக்கா முயற்சி எடுக்கும் இந்தச் சூழ்நிலையில், கண்டிப்பாக இந்திய அரசாங்கம், தானே தீர்மானம் கொண்டுவந்தாலும், strategic steps-ராஜதந்திர ரீதியில் இலங்கைக்கு

மாற்றாக, தீர்மானத்தை நிறைவேற்றி வைக்க அமெரிக்காவை வற்புறுத்த முடியும் என்ற நம்பிக்கையில் வந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை முழுமனதுடன் வரவேற்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடல் எல்லை பிரித்தாலும், உறவாலும், உணர்வாலும் ஒன்றான ஈழத் தமிழினத்தை இரக்கமின்றி அழித்திட்ட சிறுமதியர்கள் கூட்டத்தை, செந்தமிழர் இரத்தம் குடித்த சிறுநரியர் கூட்டத்தை, சர்வதேச சட்டப்படி நடவடிக்கை எடுத்திட, வீறுகொண்டு எழுந்திட்ட வீரத்தின் விளைநிலமே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களே! தங்கள் வீரத்திற்குப் பின்னே அணி வகுக்குது தமிழகமே! (மேசையைத் தட்டும் ஒலி)

இன அழிப்புக் கொடியவர்கள் எம்மண்ணில் இருந்தாலும், சட்டப்படி தண்டனை பெற்றுத் தந்திட வேண்டும். சிறுமதியோர்க்கு எதிராய் சீற்றம் கொண்டு சாட்டையடி தந்திட்ட சரித்திரமே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களே! தங்கள் வீரத்திற்குப் பின்னே அணி வகுக்குது தமிழகமே! (மேசையைத் தட்டும் ஒலி)

'பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிஜம்' என்று சங்காக முழங்கும் சாதுர்யமே, எம்மினத்தை அழித்து எகத்தாளம் புரிந்திட்ட போர்க் குற்றம் புரிந்தோர்க்கு எதிராக போர்ப் பரணி பாடும் புரட்சியே, மாண்புமிகு அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் வீரத்திற்குப் பின்னே அணி வகுக்குது தமிழகமே! (மேசையைத் தட்டும் ஒலி)

குருதி குடித்து கொழுத்த கும்பலுக்கு, கொத்துக் குண்டுகளால் நம் இனத்தை சிதைத்த கும்பலுக்கு எதிராக, ஜனநாயக முறைப்படி, சட்டப்படி நடவடிக்கை எடுத்து, "தமிழன் யாருக்கும் தாழாமல், யாரையும் தாழ்த்தாமல், எவரையும் சுரண்டாமல், எவருக்கும் எஜமானாக இல்லாமல், உலகில் எவருக்கும் அடிமையாக இல்லாமல் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதே எங்களது தலையாய கொள்கை" என்றாரே பேரறிஞர் அண்ணா, அவர்களின் பொன்மொழியைப் பின்பற்றி, இலங்கைவாழ் தமிழர்களுக்கு நியாயம் கிடைத்திட, அனல் பறக்க ஆவேசம் காட்டி, அகிலத்தையே உற்றுநோக்க வைக்கும் தீர்மானம் தந்திட்ட அறிவுப் பெட்டகமே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களே! தங்கள் வீரத்திற்குப் பின்னே அணி வகுக்குது தமிழகமே! (மேசையைத் தட்டும் ஒலி)

2015 செப்டம்பர் 16] [பேரவைத் தலைவர்]

புனிதமிக்கப் பேரவையில், புரட்சிகரத் தீர்மானம் இயற்றி, போர்க் குற்ற விசாரிப்பும், புரட்டாளர்களுக்குத் தண்டனையும் பெற்றுத் தர புரட்சிக் குரல் ஒலிக்கும் புறநானூற்றின் புது வடிவே, மாண்புமிகு அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் வீரத்திற்குப் பின்னே அணி வகுக்குது தமிழகமே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை தமிழகமே அணிவகுத்து வரவேற்கிறது. இன்று உலக ஓசோன் பாதுகாப்பு நாள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே என்றைக்கும் தமிழர்கள் அனைவருக்கும் பாதுகாப்புதான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வுகளோடு என்னுடைய கருத்தையும் தெரிவித்துக்கொண்டு, வரவேற்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

முற்பகல் 11-45

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து. . . (குறுக்கீடுகள்)

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .